புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அளம் நாவல் காட்டும் பாலின வேறுபாடு

**க.ரேணுகாதேவி**
முனைவர்பட்ட பகுதிநேர ஆய்வாளர்
அழகப்பா பல்கல்லைக்கழகம், காரைக்குடி

**முனைவர் இரா.நித்யா,** நெறியாளர்
உதவிபேராசிரியர்
மற்றும் துறைத்தலைவர் (பொ.)
தமிழ்த்துறை, அரசு மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,பரமக்குடி

*ஆய்வு சுருக்கம்*

*இன்றைய சமூகச் சூழலில் உயிரிகளின் படைப்பு ஆண், பெண் என்னும் இரண்டு பாலினப் பாகுபாடுகளைக் கொண்டு அமைந்திருக்கிறது. இவ்வாறான பாலினப்பாகுபாடுகள் தோற்ற அமைப்பு, உடற்கூறுகள், செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. உடலின் அடிப்படையில் ஆண்,பெண் என்னும் வரையறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நில அமைப்பில் சங்க காலம் முதல் தொடர்ந்து வந்துள்ளதை அறியமுடிகிறது. இப்பாலினப் பாகுபாடுகள் காலப்போக்கில் தொழிலின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு என்ற நிலையில் வந்துள்ளது. தொழிலை முதன்மையாகக் கொண்டு ஆண், பெண் ஆகியோரின் நிலைப்பாடு இங்கு எவ்வாறு பயின்று வந்துள்ளன என்பதை 'அளம்' நாவலில் காணப்படவுள்ளன.*

*முக்கியச்சொற்கள் : பாலினம், பெண், உப்பளம், தொழில், வேறுபாடு*

*முன்னுரை*

*இன்றைய சமுதாய கட்டமைப்பு பல்வேறான ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துகின்றன. தொழில் ரீதியான பாகுபாடு என்பது பெரிதும் காணப்படுகின்றன தொழில் ரீதியாக ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள பாகுபாடுகள் எவ்வாறு உள்ளன என்பதை பல்வேறு படைப்பாளர்கள் தன்னுடைய எழுத்துக்களின் மூலம் இன்றைய சமூக சூழலைச் சித்தரிக்கின்றனர். ஆண், பெண் ஆகியோர் இடையே காணப்படக்கூடிய மதிப்பீடுகளையும் புனைகளையும் விமர்சனத்துக்கு உள்ளாக்குவதும், அவற்றின் நிலையினை எடுத்துரைப்பதும் தொடர்ந்து நிகழ்ந்துவரும் செயலாக உள்ளது.*

*இக்கட்டுரை தொழில் அடிப்படையில் ஆண், பெண் வேறுபாடு எவ்வாறு பார்க்கப்படுகிறது, காலந்தோறும் அவ்வேறுபாட்டின் தன்மை எவ்வாறு உள்ளது என்பதினையும், அளம் புதினத்தில் அது எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதினையும் ஆராய்வதாக உள்ளது.*

*தொழில் பற்றிய விளக்கங்கள்*

*தொழில் என்பதற்கு காலந்தோறும் பலவகையான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. 'Proffesson, Action, Work, Deed'[1] என்ற சொற்கள் ஆங்கிலத்தில் தொழிலைக் குறிக்கும் சொற்களாகும்.*

*"தொழில் – ஆக்கல், காத்தல், அழித்தல் என்றும் உழவு, தொழில். வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்"[2] என்று அபிதான சிந்தாமணி குறிப்பிடுகின்றது.*

*தொழில் 1. கிரியாசக்தி 2. செயல் 3.தந்திரம் 4. பொருளினது புடைப்பெயர்ச்சி 5.வேலை[3] எனத் தமிழ்ச்சொல்லகராதிக் குறிப்பிடுகின்றது.*

தொழில்தளத்தில் பாலின வேறுபாடு – வரையறையும் விளக்கமும்

தொழில் என்பது வாழ்க்கையை நடத்தத் தேவைப்படும் பொருளை ஈட்டுவதற்கான வழிமுறையாகும்.

மனிதன் என்பவன் ஒரு தனித்த உயிர் ஆகும். மனிதன் மட்டும் இயற்கையைத் தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு வாழக்கூடியவன். தனக்குத் தேவையானவற்றைத் தானே உற்பத்தி செய்கிறான். மனிதன் மட்டும் உற்பத்தி செய்து உணவைப் பெற்று வாழும் தன்மையினைப் பெற்றுள்ளான். உழைப்பு என்னும் நடவடிக்கையினை மேலும் மேலும் செழுமைப்படுத்த அறிவைப் பயன்படுத்தினான். வேட்டை, மேய்ச்சல், வேளாண்மை, வணிகம் என்று மனித இனத்தின் செயல்பாடுகள் விரிவடைந்து கொண்டே சென்றன. வேட்டை நிலையிலும் மேய்ச்சல் நிலையிலும் தொடக்க வேளாண்மையிலும் மொத்த சமூகமும் சேர்ந்து பணியாற்றி உணவினைப் பெற்றனர்.

"நறு விரை துறந்த நாறா நரைத்தலைச்
சிறுவர் தாயே! பேரிற் பெண்டே!"[22]
"முளரி மருங்கின் முதியோள் சிறுவன்"[23]

என்னும் புறநானூற்று வரிகளின் மூலம் சமூகத்தில் பெண்களின் நிலையினை அறிந்து கொள்ளமுடிகிறது.

கிராமப்புறங்களில் குழந்தைகள் தவிர, சிறியவர் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் உழைக்கக் கூடியவர்கள். உடல் உழைப்பைத் தர இயலவில்லை என்றாலும் அவர்களால் முடிந்த வேலையைச் செய்வார்கள்

சு.தமிழ்ச்செல்வியின் புதினங்கள் அனைத்துமே வேதாரணியம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை என்னும் சிறு நகரங்களைச் சுற்றியுள்ள கடல்சார்ந்த பகுதிகளையே கதைக்களமாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு புதினத்திலும் ஒரு பொருளாதாரச் சூழலை மையமாக வைத்துக் கதை பின்னப்பட்டுள்ளதைக் காணலாம். அவற்றில் உப்பளத்தொழிலை மையமாகக் கொண்டு அளம் நாவல் படைக்கப்பட்டுள்ளது.

அளம் நாவல் காட்டும் பாலின வேறுபாடுகள்

அளம் என்னும் நாவல் கோயில் வளவு என்னும் கிராமத்தை வைத்துப் படைக்கப்பட்டதாகும். கடைமடைப் பகுதியாக இருந்தாலும் எழுபதுகளுக்கு முன்பு அந்தப் பகுதியில் சிறப்பாகவே வேளாண்மைத் தொழில் நடைபெற்றிருக்கின்றது. மழைக்காலத்தில் நெல்சாகுபடி செய்திருக்கின்றார்கள். ஆனால் போகப்போக அந்தப் பகுதி முழுவதும் வறண்டு போய்விட்டது. வெள்ளம் வரும் அல்லது வறண்டு போகும்.

"வற உழவாய் உழுது தெளித்து விடுவார்கள். தெளித்த நெல் முளைத்து அப்படியே வளர்ந்து விளைய வேண்டியதுதான். தெளிப்பதில் நடுவதைப்போல அதிக மகசூலும் கிடைக்காது. வானம் ஏமாற்றி விட்டால் ஒன்றும் கிடைக்காது. மாவுக்கு ஐந்து கலம் ஆறுகலம் கிடைப்பதே பெரிது. கோடைப் பயிராய்க் கம்பு, கேழ்வரகு, காடகண்ணி, வறகு என்று விளைவதை வைத்துக் கொண்டு பாதிநாள் ஓட்ட முடிந்தது"[34]

காவிரிப் பாசனப் பகுதிக்கு முன்பெல்லாம் பிற மாவட்டங்களிலிருந்து பிழைப்புக்கு வழிதேடி வருவார்கள். ஆனால் தற்போது இங்குள்ளவர்கள் பிற மாவட்டங்களுக்குப் பிழைப்புத் தேடிப்போகின்றார்கள்.

விதைப்பு நெல் விளைந்து வெள்ளத்தில் வீணாகப் போனதை, "ஓம்பேச்சுக்கேட்டு நெல்லு வெரச்சி நாகடன் பட்டுப் பாழாய் போனது பத்தாதா? நெல்லு வெரச்சி வெள்ளத்தோட வுட்டுப்புட்டுக் கொரவம்பில்ல தின்னுகிட்டுருக்குறமே. இது பத்தாதா நம்பளுக்கு?"[35] என அளம் புதினத்தில் சுந்தராம்பாள் என்னும் பாத்திரத்தின் வழி அறியமுடிகின்றது.

பெற்றோராலும், கணவனாலும், உறவினர்களாலும் பல நிலைகளில் வேளாண்மைத் தொழில் செய்யும் பெண்கள் தொல்லைப்படுகின்றார்கள். மனம் தளராமல் உழைக்கிறார்கள். பெண்கள் களை பறிக்கப் போகிறார்கள், நடவுக்குப் போகிறார்கள். கருவை வெட்டும் இடங்களுக்குப் போய் முள் கழிக்கிறார்கள் போன்ற எல்லா வேலையும் செய்கின்றாள். வேளாண்மையில் குடும்பப் பிரச்சினை, காவிரிப் பிரச்சினையால் வறட்சி போன்ற காரணங்களால் வேளாண்மைத் தொழிலைவிட்டு திருப்பூருக்குச் சென்று பின்னலாடை நிறுவனத்தில் வேலை செய்கிறாள். அங்கும் பெண்கள் கடுமையாக உழைக்கிறார்கள். பல

துன்பங்களை அனுபவிக்கிறார்கள். சு.தமிழ்ச்செல்வியின் புதினத்தில் சுட்டப்படும் பெண்கள் அனைவரும் தங்கள் ஏற்படும் துன்பத்தை அனுபவிப்பது தலைவிதி என நினைத்துக் கொள்கிறார்கள். அது தங்கள் குடும்பப் பெண்களுக்கு ஏற்படுவதும் அதே தலைவிதிதான் எனவும் மனதினை மாற்றிக்கொள்பவர்களாக உள்ளதினை ஆராய முடிகிறது.

உப்பளத் தொழில்

சு.தமிழ்ச்செல்வி நாவலில் நெய்தல் நில மக்களின் தொழிலில் மீன் பிடித்தலும் உப்பளத் தொழிலும் பிரதானமாகப் பேசப்படுகிறது. *"கடல் அருகில் வாழ்நர் பரதவர் எனப்பட்டனர். இத்தகைய பரதவர் மீன் பிடித்தலையும் உப்பு விளைத்தலையும் தொழிலாகக் கொண்டனர்."*[36] என்று மா.இராசமாணிக்கனார் இதனை உறுதிப்படுத்துகிறார் எனலாம்.

கடற்கரையிலுள்ள உப்பளங்கள் அப்பகுதியைச் சார்ந்த மக்கள், குறிப்பாக ஆதிக்க சக்திகளாக இருந்தவர்கள், புறம்போக்கு நிலங்களை வளைத்து உப்பளம் ஆக்கி விட்டார்கள். அவற்றில் அப்பகுதிகளில் வாழும் மக்கள் தொழிலாளர்களாக வேலை செய்தார்கள். அதில் வரும் பொருளாதாரத்தின் மூலமாகவே அவர்கள் வாழ்க்கை நடத்தினர் என நாவலாசிரியர் அளம் நாவலில் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது.

நதிநீர்ப் பிரச்சினைகளால் முதல் மடைப் பகுதியே பாதிக்கப்பட்டதால் கடைமடைக்குத் தண்ணீர் போவது கனவாகி விட்டது. அதனால் கிராமங்களில் வாழ்ந்தவர்கள் உப்பளத்தை நம்பியே வாழவேண்டிய சூழல் ஏற்பட்டது. இது பற்றிய பதிவுகள் அளம் புதினத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

அளம் புதினத்தின் தலைமைப் பெண் கதை மாந்தர் சுந்தரம்பாளின் கணவன் சுப்பையன் மனைவி மூன்று பெண்பிள்ளைகளை விட்டுவிட்டுச் சிங்கப்பூர் சென்றுவிட்டான். அவனைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை. தாய்க்காரி மிகவும் சிரமப்பட்டு இரண்டு மகள்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறாள். மூத்த மகள் வடிவாம்பாளுக்கு இருமுறை கல்யாணம் நடந்தது. ஒருத்தன் வயதானவன்; இன்னொருவன் நோயுற்றவன். இரண்டு பேருமே செத்துப் போனதால் வடிவாம்பாள் விதவையாகி வீட்டுக்கு வந்து விட்டாள். இரண்டாவது பெண் ராசாம்பாள், கணவன் இரண்டாம் தாரம் கட்டிக் கொண்டதால் மூன்று பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தாய்வீடு வந்துவிட்டாள். மூன்றாவது பெண் அஞ்சம்மாள் கல்யாணம் ஆகாமல் வீட்டில் இருக்கிறாள்.

சாகுபடி பொய்த்துப் போனதால் ஆண்கள் பெரும்பாலானவர்கள் அளத்திற்கு வேலைக்குப் போனார்கள். கோயில் வளவு பெண்கள் அளத்து வேலைக்கெல்லாம் போகமாட்டார்கள். விவசாயம் பொய்த்துப் போனதால் சாப்பாட்டிற்கு வேறுவழியில்லை. *"சனங்கள் பிழைப்பதற்கு வழியில்லாமல் போனது. ஊரில் ஆடுமாடுகள் இல்லை. நெல்லு நீரு விளையவில்லை. பனங்கிழங்கும் கிடைக்காமல் போய்விட்டது. மின்னிக் கிழங்கும் கொட்டிக் கிழங்கும் காராங்கொட்டிக் கிழங்கும்தான் சனங்களுக்கு உணவாக இருந்து உயிர் காத்தது. இந்தக் கிழங்குகளுக்காகக் கூடச் சனங்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள்."*[36] என கிராமங்களில் மக்கள் உணவுக்கு அனுபவித்தக் கொடுமைகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

சுந்தராம்பாளுக்கு உப்பள வேளையில் ஈடுபாடு இல்லை. உடம்பில் சூடேறும்; கால்களில் புண் ஏற்பட்டு ஆறாது. பிழைப்பிற்கு வேறு வழியில்லாததால் மகள் வடிவாம்பாளும் அஞ்சம்மாளும் உப்பள வேலைக்குப் போக வேண்டுமென்று கூறுகின்றார்கள். குடும்பத்தில் சொல்ல முடியாத வறுமை. கீரையைச் சுண்டித் தின்கிறார்கள். புளியங்கொட்டையை வறுத்துத் தின்றார்கள். அழலைக் கொடியிலுள்ள காய்கறிகளின் கொட்டிய விதையை வறுத்து அரைத்துக் கிண்டித் தின்றார்கள். கொட்டிக் கிழங்கு, பனங்கிழங்கு, பனம்பழம் போன்றவற்றையும் தின்றார்கள். அம்மா படும் வேதனையைப் பார்த்துச் சின்னவள் அஞ்சம்மாள் வேதனைப்பட்டாள்.

உப்பளத்தில் ஆண்களோடு பெண்களும் சேர்ந்து உப்பள்ளும் வேலைகளைப் பார்ப்பார்கள். அளம் அமைக்கும்போது கரை கட்டுவது, வாய்க்கால் அமைப்பது போன்ற வேலைகளுக்குப் பெண்களைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். சுந்தராம்பாளும் அஞ்சம்மாளும் பொது இடத்தில் விளைந்திருக்கும் உப்பை அள்ளி வந்து பல ஊர்களுக்குக் கொண்டு போய் விற்றுவிட்டு அரிசி வாங்கி ஆக்கித் தின்றார்கள்.

அம்மாவுக்கு உதவி செய்ய«வ்ணடும் என்பதற்காக அஞ்சம்மாள் பையனாக மாறுகின்றாள். அவளுடைய கூட்டாளி பூச்சி என்பவனின் கிழிந்த சட்டையை வாங்கி மாட்டிக் கொண்டு அளத்தில் மண்கூடை தூக்குகின்றாள். "பூச்சி வந்தவுடன் அவன் கோமணத்தைக் கட்டிக் கொண்டு தன்னுடைய கால்சட்டையை அவிழ்த்துக் கொடுத்தான். கால்சட்டையின் பின்பக்க ஓட்டையை ஒட்டுப் போட்டுத் தைத்திருந்தான். பூச்சியின் சட்டையைப் போட்டுக் கொண்டாள்... பூச்சியுடன் போய்ச் சீட்டுக் கூடை தூக்கினாள்"[77] கால் வயிற்றை நிரப்பிக் கொள்ளச் சுந்தராம்பாளின் குடும்பம் படும் துன்பத்தை இவ்வாறு பதிவுசெய்கிறார். மேலும் தங்களது வறுமையிலிருந்துக் காத்துக் கொள்ள நெய்தல் நிலத்தில் மக்கள் செய்த பல்வேறு வேலைகளையும் அதன் கொடுமைகளையும் விளக்குகிறார்.

*"உப்பளத்தில் வேலை செய்வது மற்ற வேலைகளைப் போலச் சுலபமானதல்ல. கொளுத்தும் வெயிலில் நிற்கவேண்டும். உருக்கி ஊற்றிய ஈயமாய் உப்புத்தரை சுடும். எவ்வளவு சிவப்பு நிற உடம்பாய் இருந்தாலும் ஒரே நாளில் பனங்காய் கருப்புபோல் நிறம் மாறிவிடும். உடம்பும் எவ்வளவு தின்றாலும் தேறாது. கருவாடு போட்ட மீனைப் போல வத்தலாகி விடும். கைகளிலும் கால்களிலும் உப்பு வெட்டிப் புண்ணாகி விடும்."*[78] வேளாண் தொழிலைவிட, அளத்தில் வேலை செய்வது உடலுக்கு மிகுந்த பாதிப்பைக் கொடுக்கும் என்பதினை மேற்கண்ட வரிகளில் ஆராயமுடிகிறது.

நந்தன வருசத்தின் புயலுக்குப் பிறகு கடற்கரையைச் சார்ந்த மக்கள் உப்பளத்தையே நம்பி வாழ்ந்தார்கள். பெரிய பெரிய தனியார் உப்பு நிறுவனங்களும் அந்தப் பகுதிகளில் வளர ஆரம்பித்தன. முற்றிலுமாக வேளாண்மை கை கொடுக்காததால் உப்பளமே பெரும்பாலான மக்களுக்கு உணவுக்கு வகை செய்தது. கோயில் வளவில் பொதுவாகக் கிடந்த புறம்போக்கு நிலத்தில் உப்பளம் அமைக்க ஊர் மக்கள் ஆளுக்கு ஒரு ஏக்கர் பிரித்துக் கொண்டார்கள். *"ஒன்னுகிட்ட எப்புடிச் சொல்லுவாவொ? ஆம்புளப்புள்ள பெத்திருக்கணும். இல்லாட்டி ஆம்புடயானாவது வூட்டுல இருக்கணும். ஒனக்குத்தான் எதுவுமே இல்லையே; எப்படி சொல்லுவாவோ?"*[79] என்கிற காரணத்தைக் காட்டி சுந்தராம்பாள் குடும்பத்திற்கு மட்டும் பங்கு கொடுக்கவில்லை. இதைக் கேட்டு சுந்தராம்பாளும் வடிவாம்பாளும் அதிர்ச்சி அடைந்தார்கள்.

இந்தக் காரணங்களால் சுந்தராம்பாள் குடும்பத்திற்கு அளத்தில் பங்கு கிடைக்கவில்லை. முடியாதவர் ஒருவரின் அளத்தைக் குத்தகைக்குப் பேசிக் கொண்டு தாயும் மகள்களும் உப்புக் காய்ச்சினார்கள். குடும்பத்திற்கு உப்புதான் சோறுபோட்டது. பிறகு குத்தகைக்கு எடுத்த அளத்தையே வாங்கிவிட்டார்கள். இருமுறை கல்யாணமாகி விதவையாகி வந்திருந்த வடிவாம்பாளுக்கு அளத்தில் கடுமையாக வேலை செய்தது மனதிற்கு ஆறுதலைக் கொடுத்தது. கூலிக்குப் போய் ஆண்களோடு வேலை செய்வதைவிடத் தனியாக அளத்தில் வேலை செய்வது மனநிறைவாக இருந்தது.

தாலியைக் கழற்றிச் சாமி உண்டியலில் போட்டுவிட்டு மூன்று பிள்ளைகளோடு ராசாம்பாள் அம்மா வீட்டுக்கு வந்து விட்டாள் சுந்தராம்பாள். மீண்டும் அவளை மாமியார் வீட்டில் சேர்த்துவிட எவ்வளவோ முயற்சி செய்தாள். ராசாம்பாள் இனிமேல் வாழ முடியாது என்று மறுத்துவிட்டாள். *"அம்மா நீ சும்மா கெடந்து அலயாத. நான் இன்னிக்குச் சொல்லுறதுதான். நீ எத்தனை பேர அளச்சாந்து பஞ்சாயத்து வச்சாலும் எம்மனசு மாறாது. இனிமே அந்தப் பாவியோட மொவத்துல முளிக்க மாட்டங். அவன் வச்ச அடிய மிறிக்க மாட்டங். அவன் இருக்குற தொயில தலவச்சிக் கொட படுக்கமாட்டங். அவன் யாரோ நான் யாரோ தான்."*[80] என உறுதியாகக் கூறியதோடு மட்டுமல்லாது வாழ்ந்தும் காட்டுகின்றார்.

சு.தமிழ்ச்செல்வி தனது அளம் நாவல் வழியாக அளம் அமைப்பது பற்றிய தகவலை விரிவாகப் பதிவு செய்துள்ளது மட்டுமன்றி உப்பளத் தொழில் உள்ள இன்னல்களையும் அதனை அம்மக்கள் எதிர்கொள்ளும் முறையினையும் விரிவாகச் சுட்டுகின்றார்

நெய்தல் திணை மக்களின் தொழிலாகச் சுட்டப்படும் மீன் பிடித்தலும் அதனைச் சார்ந்த தொழில்களும் உப்பளத்தொழிலும் அதன் துன்பங்களையும் நாவலின் பாத்திரங்களின் வழியாக ஆராயமுடிகிறது. அளம் நாவலில் உப்பளத் தொழிலும் அத்தொழில் உடல், உள்ளம் இரண்டும் அடையும் துன்பங்களைச் சுட்டிக்காட்டி உள்ளதை ஆராயமுடிகிறது.

முடிவுரை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நில அமைப்பிலும் நிலவி வந்துள்ளதை சங்க காலம் முதல் தொடர்ந்து வந்துள்ளதை அறியமுடிகிறது. இப்பாலினப்

பாகுபாடுகள் காலப்போக்கில் தொழிலின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு என்னும் நிலையானது பல்வேறு தளத்திலும் நிலவி வந்துள்ளது.

உப்பளத்தில் வேலை செய்வது மற்ற வேலைகளைப் போலச் சுலபமானதல்ல. கொளுத்தும் வெயிலில் நிற்கவேண்டும். உருக்கி ஊற்றிய ஈயமாய் உப்புத்தரை சுடும். எவ்வளவு சிவப்பு நிற உடம்பாய் இருந்தாலும் ஒரே நாளில் பனங்காய் கருப்புபோல் நிறம் மாறிவிடும். உடம்பும் எவ்வளவு தின்றாலும் தேறாது. கருவாடு போட்ட மீனைப் போல வத்தலாகி விடும். கைகளிலும் கால்களிலும் உப்பு வெட்டிப் புண்ணாகி விடும். வேளாண் தொழிலைவிட, அளத்தில் வேலை செய்வது உடலுக்கு மிகுந்த பாதிப்பைக் கொடுக்கும் என்பதினை ஆராயமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.779
2. அபிதான சிந்தாமணி, தமிழ்க்களஞ்சியம், ப.902
3. தமிழ்ச்சொல்லகராதி, ப.1331
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.780
5. புறநானூறு, பா.வ.270 (5,6)
6. மேலது, பா.வ.278 (2)
7. சு.தமிழ்ச்செல்வி, அளம், ப.எ.32
8. மேலது,ப.108
9. சு.தமிழ்ச்செல்வி, அளம். ப.எ.157
10. மேலது, ப.117
11. மேலது, ப.65
12. மேலது, ப.எ.199
13. மேலது,ப.எ.239

துணைநூற்பட்டியல்

1. தமிழ்ச்செல்வி, சு., அளம், மருதா, 266, பாரதி சாலை, ராயப்பேட்டை,சென்னை – 14, 2002.
2. சிங்கராவேலு முதலியார் ஆ., அபிதான சிந்தாமணி, Asian Educational Services, புதுடெல்லி, 1983.
3. சிங்காரவேலு முதலியார் ஆ., க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, சென்னை, 1992.
4. Tamil Lexicon, Volume – 2, Part-2, University of Madras, Madras, 1927.
5. சுப்பிரமணியம், ச.வே., (உ.ஆ.),புறநானூறு (மூலமும் உரையும்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600108, 2010.

********* ********* ********** ********* ********* ********** ********** **********